யா/கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம்

பரிசில் தினம்

2026

தலைமை

திரு குலசிங்கம் திலீபன்

வித்தியாலய முதல்வர்

பிரதம விருந்தினர்

திரு.யோகேந்திரா ஜெயச்சந்திரன்

மாகாணக் கல்விப் பணிப்பாளர்

வடக்கு மாகாணம்

சிறப்பு விருந்தினர்

திருமதி.சபாஜினி பகீரதன்

பிரதி முகாமையாளர்

மக்கள் வங்கி, சுன்னாகம்,

பழைய மாணவி

யா/கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயத்தின் 2025 ஆம் ஆண்டிற்கான அதிபர் அறிக்கை

எல்லாம் வல்ல அற்புதநர்த்தன விநாயகப் பெருமானின் திருப்பாதக்கமலங்களைப் பணிந்து யா/கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாயலத்தின் 2025 ஆம் ஆண்டுக்குரிய பரிசில் தின அறிக்கையை உங்கள் முன் சமர்ப்பிப்பதில் அகமகிழ்வடைகின்றேன்.

இன்றைய பரிசில் தின விழாவிற்குப் பிரதம விருந்தினராக வருகை தந்திருக்கும் பெருமதிப்பிற்குரிய வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் திரு.யோகேந்திரா ஜெயச்சந்திரன் அவர்களே!.

சிறப்பு விருந்தினராக வருகை தந்துள்ள எமது வித்தியாலயத்தின் பழைய மாணவியும், தற்போது சுன்னாகம் மக்கள் வங்கிக் கிளையில் பிரதி முகாமையாளராகக் கடமையாற்றும் திருமதி சுபாஜினி பகீரதன் அவர்களே!

எமது விழாவைச் சிறப்பித்துக் கொண்டிருக்கும் கல்வித்திணைக்கள அதிகாரிகளே! சகோதரப் பாடசாலை அதிபர்களே! ஆசிரியர்களே! எமது பாடசாலையில் இருந்து ஓய்வு பெற்றுச் சென்ற அதிபர், ஆசிரியர்களே! பழைய மாணவர்களே! பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களே! நலன் விரும்பிகளே! எமது வித்தியாலய பிரதி உப அதிபர்களே! பகுதித்தலைவர்களே! ஆசிரியர்களே! மாணவச் செல்வங்களே! அனைவருக்கும் எனது வணக்கத்தைக் தெரிவப்பதோடு அனைவரையும் உளமார வரவேற்று நிற்கின்றேன்.

இன்றைய பரிசில் தின விழாவிற்குப் பிரதம விருந்தினராக வருகை தந்திருக்கும் பெருமதிப்பிற்குரிய வடமாகாண கல்விப் புலத்தை தலைசிறந்த ஆளுமையுடன் நிர்வகித்து முகாமை செய்கின்ற வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் திரு.யோகேந்திரா ஜெயச்சந்திரன் அவர்களை அக மகிழ்வோடு வரவேற்கின்றேன்.

எமது பிரதம விருந்தினர் அவர்கள் அம்பாறை திருக்கோவில் என்கின்ற செழிப்பான கிராமத்தில் திரு திருமதி யோகேந்திரா வள்ளியம்மை தம்பதிகளின் இல்லறத் தவப்பேற்றால் அவர்களுக்கு சிரேஷ்ட புதல்வராகப் பிறந்தார். இவர் தமது ஆரம்பக்கல்வியை திருக்கோவில் மெதடிஸ்த மிஷன் தமிழ் மகா வித்தியாலயத்தில் ஆரம்பித்தார். அதன் பின்னர் இடைநிலைக்கல்வியை திருக்கோவில் தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலயத்தில் தொடர்ந்து கற்றுப், பின்னர் கல்முனை பற்றிமா தேசிய பாடசாலையில் உயர்தரக் கல்விக்காக இணைந்து வணிகப்பிரிவை தேர்ந்து உயர் கல்வியைக் கற்றார். க.பொ.த உயர்தரப்பரீட்சையில் சிறந்த பெறுபேற்றைப் பெற்று வந்தாறுமூலை கிழக்கு பல்கலைக்கழகத்தில் இணைந்து வர்த்தக இளமாணிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டார்.

இவர் வாழைச்சேனை வலயக்கல்வி அலுவலகத்தில் கணக்குப் பதிவாளராக முதல் நியமனம் பெற்றார். அக்காலப் பகுதியில் கல்வி நிர்வாக சேவைப் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து, அக்கறைப்பற்று வலயக்கல்வி அலுவலகத்தில் திட்டமிடல் உதவிக்கல்விப் பணிப்பாளராகப் பதவியேற்றார். பின்னர் அதனைத் தொடர்ந்து திருக்கோவில் கல்வி வலயத்தில் திட்டமிடல் பிரதிக்கல்விப் பணிப்பாளராகவும், கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தில் திட்டமிடல் உதவிக்கல்விப் பணிப்பாளராகவும் பின்னர் திருக்கோவில் கல்வி வலயத்தின் நிர்வாகப் பிரதிக்கல்விப் பணிப்பாளராகவும் பொறுப்பேற்று சிறப்பாகக் கடமையாற்றினார். அவ்வேளை கிழக்கு பல்கலைக்கழகத்தில் கல்வி முதுமாணி (MEd) பட்டத்தையும், திறந்த பல்கலைக்கழகத்தில் பட்டப்பின் படிப்பு கல்வி டிப்ளோமா பட்டத்தையும் பெற்றுக்கொண்டார். பின்பு திருக்கோவில் வலயக்கல்விப் பணிப்பாளராகப் பதவி உயர்வு பெற்றார். தொடர்ந்து இடமாற்றம் பெற்று மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தின் வலயக்கல்விப் பணிப்பாளராக பணி புரிந்தார். இவர் கல்வி நிர்வாக சேவையில் முதற் பிரிவு நிலையையைப் பெற்று 2025ஆம் ஆண்டு முதல் வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளராக சிறந்த முறையில் செயலாற்றிக் கொண்டு வருகின்றார்.

மேலும் இவர் சிறந்த விளையாட்டு வீரராகச் செயற்பட்டுள்ளார். விளையாட்டில் இவருக்கிருந்த ஆர்வத்தினால் திருக்கோவில் உதயசூரியன் விளையாட்டுக் கழகத்தின் தலைவராகச் செயற்பட்டு கழக துடுப்பாட்ட அணி, காற்பந்து அணி என்பவற்றை சிறப்பாக உருவாக்கி பயிற்சி அளித்து வெற்றிகளை ஈட்டுவதற்கு பெரிதும் உந்து சக்தியாக விளங்கியுள்ளார் அது மட்டுமன்றி

இளைய சமுதாயத்தின் ஒழுக்கம், தலைமைத்துவம், கலை பண்பாட்டு நிகழ்வுகளில் பங்கேற்றல் போன்ற மிக நல்ல விடயங்களில் தன்னை ஈடுபடுத்தி வெற்றியையும் கண்டுள்ளார். சமய சமூக விழுமியங்களை மாணவர்கள் கடைப்பிடித்து ஒழுக வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர். அதனை பல்வேறு செயற்றிட்டங்கள் ஊடாக செயற்படுத்தியும் வருபவர்.

இவ்வாறான பல்துறை ஆளுமை, சமூக விழுமியங்களில் பற்றுறுதி, மாணவர் ஆசிரியர்களுடைய நலன் பேணும் பண்பு போன்றவற்றை உடைய பிரதம விருந்தினர் திரு.யோகேந்திரா ஜெயச்சந்திரன் அவர்கள் எமது பரிசில் தின விழாவிற்கு வருகை தந்தமை எமது வித்தியாலய சமூகத்திற்கு மட்டில்லா மகிழ்ச்சியைத் தந்துள்ளது. இவரது கரங்களால் பரிசில்களைப் பெறப்போகும் எமது மாணவர்கள் பாக்கியம் செய்தவர்கள் ஆவார். எமது வித்தியாலயம் தங்களின் வருகையால் பெருமை கொள்கின்றது.

எமது வித்தியாலயதின் பரிசில் தின விழாவிற்கு சிறப்புச் சேர்ப்பதற்காக சிறப்பு விருந்தினராக வருகை தந்துள்ள, எமது வித்தியாலய பழைய மாணவியான திருமதி சுபாஜினி பகீரதன் அவர்களை வித்தியாலய சமூகம் சார்பாக உள மகிழ்வோடு வரவேற்கின்றேன். இவர் எமது வித்தியாலயத்தில் ஆரம்ப, இடைநிலைக் கல்வியை கற்றுத் தேர்ந்தார். விஞ்ஞானப் பிரிவில் உயர்தரக் கல்வியை தொடர்வதற்காகக் யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் இணைந்து கொண்டார். இவர் க.பொ.த உயர்தரத்தில் சித்தி பெற்று யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் விவசாய பீடத்தில் இணைந்து விவசாய விஞ்ஞானமாணிப் பட்டத்தை பெற்றுக்கொண்டார்.

சிறப்ப விருந்தினர் அவர்கள் 2012 ஆம் ஆண்டு தொடக்கம் 2014 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விவசாய பீடத்தில் செயல்முறை விரிவுரையாளர் ஆகப் பணிபுரிந்தார். பின்னர் 2015ஆம் ஆண்டு மக்கள் வங்கியில் இணைந்து முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய பிரதேசங்களில் துணை முகாமையாளராக கடமையாற்றியுள்ளார். தற்பொழுது இவர் சுன்னாகம் மக்கள் வங்கியில் பிரதி முகாமையாளராக சிறப்பாக சேவையாற்றி வருகின்றார். எமது வித்தியாலயத்தின் பழைய மாணவியான திருமதி சுபாஜினி பகீரதன் அவர்கள் இன்றைய பரிசில் நாளில் சிறப்பு கலந்து கொண்டிருப்பது எமக்கு மட்டற்ற மகிழ்ச்சியைத் தந்துள்ளது.

1962 ஆம் ஆண்டு கொடைவள்ளல் அமரர் கணபதிப்பிள்ளையார் வேலுப்பிள்ளை சரவணமுத்து (ஆசைப்பிள்ளை) அவர்களால் எமது வித்தியாலயம் ஸ்தாபிக்கப்பட்டது. இன்று எமது வித்தியாலயம் 64 ஆண்டுகளைக் கடந்து கல்விப் புலத்திலே தனக்கென்று ஒரு தனியான இடத்தைப் பிடித்துக் கோண்டாவில் பகுதியிலே தலைநிமிர் கல்விக்கூடமாகத் திகழ்ந்து வருகின்றது.

வித்தியாலயம் கல்வியில் உயர்தர அடைவுகளைப் பெற்றது மட்டுமன்றி, ஏனைய செயற்பாடுகளிலும் தன்னை நிலைநிறுத்தி வளர்ச்சிப்படியில் முன்நிற்கின்றது . அந்த வகையில் தேசிய நூலக ஆவணமாக்கல் சேவைகள் சபையால் 2025 ஆம் ஆண்டு பாடசாலை நூலகங்களுக்கிடையே நடாத்தப்பட்ட தேசிய மட்டப் போட்டியில் பங்கு கொண்டு எமது வித்தியாலயம் மூன்றாம் இடம் பெற்று அதி உயர் விருதான தேசிய விருதினைப் பெற்றுக்கொண்டது. அத்துடன் தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தால் நடாத்தப்படும் தேசிய உற்பத்தித் திறன் விருதிற்கான போட்டிக்கு எமது வித்தியாலயம் தெரிவு செய்யப்பட்டுள்ளமை மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

அடுத்து வித்தியாலயத்தின் கல்வி அடைவு மட்டத்தை நோக்குகின்றபோது 2025 ஆம் ஆண்டு க.பொ.த உயர்தரம் வணிகப்பிரிவில் B,C,S பெறுபேற்றை மாணவர் ஒருவரும், க.பொ.த சாதாரண தரத்தில் அதி உயர் பெறுபேறாக 6A, 2B, C ஐ மாணவி ஒருவரும் பெற்றுள்ளனர்.. மேலும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் ஒரு மாணவன் 147 புள்ளிகளைப் பெற்று சித்தி அடைந்துள்ளார். ஏனைய நான்கு மாணவர்கள் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அடுத்து இணைபாட விதான செயற்பாடுகளில் ஈடுபடுத்தும் மாணவர்களை முகமாகப் பல்வேறு மன்றங்கள் இயங்கிவருகின்றன. மாணவர்கள் நிகழ்வுகளில் பங்கு கொண்டு வெற்றிகளைப் பெற்றுள்ளனர். அந்த வகையில் பிரிவு 2 பாவோதல் போட்டியில் ஒரு மாணவியும், பெருவிளையாட்டு எல்லேயில் 16 மாணவர்களும், ஈட்டி எறிதல் 18 வயதுப்பிரிவில் ஒரு

மாணவியும் அகில இலங்கைச் சித்திரப் போட்டி பிரிவு 5 இல் ஒரு மாணவியும் மாகாணப் போட்டிகளில் பங்குபற்றி தமது திறமைகளை வெளிப்படுத்தி வித்தியாலயத்திற்குப் பெருமை சேர்த்துள்ளனர்.

மேலும் தேசிய கலை இலக்கியப் பாடல் நயத்தல் போட்டியில் மாணவி ஒருவர் தேசிய மட்டத்தில் பங்கு கொண்டள்ளார் என்பது வித்தியாலயத்திற்குப் பெருமையைத் தந்துள்ளது. றோயல் கல்லூரி மாணவர் மன்றத்தின் ஊடாக நடைபெற்ற அகில இலங்கை நாடகப் போட்டியில் எமது வித்தியாலய மாணவர்கள் பங்கு கொண்டு வெற்றிகளைத் தமதாக்கிக் கொண்டனர். தேசிய மட்டத்திலே தனிநடிப்பு 3 ஆம் இடத்தையும் குழு நாடகப் போட்டியில் 2 ஆம் இடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

இத்தகைய அனைத்து வெற்றிக்கும் வித்தியாலயத்தின் அதிபர், பிரதி அதிபர், உப அதிபர், பகுதித்தலைவர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் ஆகியோரின் அயராத உழைப்பே காரணமாக அமைந்தது. இவ்வாறு எமது வித்தியாலயத்தின் ஆளுமை விருத்திச் கல்விச் செயற்பாடுகளுக்கான, நிதி மற்றும் ஏனைய வளங்களை வித்தியாலய பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் நல்லுள்ளம் படைத்த தனவந்தர்கள் வழங்கி வருகின்றனர். பௌதிக வளத்தை மேம்படுத்துவதற்கு உள்நாட்டில் வாழும் பழைய மாணவர்கள், புலம் பெயர் வெளிநாடுகளில் வாழும் பழைய மாணவர்கள், வித்தியாலயத்தின் உயர்வைக் கருத்தில் கொண்டு பல்வேறுபட்ட செயற்றிட்டங்கள் ஊடாக உதவி வருகின்றனர். இத்தருணத்தில் அவர்கள் அனைவருக்கும் வித்தியாலய சமூகம் சார்ந்து நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

வித்தியாலயத்தின் நிர்வாகக் கட்டமைப்பு

முகாமைத்துவக்குழு

- திரு.கு.திலீபன்
- திரு.ய.ஸ்ரீகுமார்
- திருமதி.க.குகதாசன்
- திரு.சு.ஜ.ஜயஸ்ரீ
- திரு.கு.பிரதீபன்
- திருமதி.இ.உருத்திரன்
- திருமதி.க.நிருபா
- திருமதி.சி.திருமாறன்
- திருமதி.க.விமலநாதன்
- திரு.வி.விஜயசங்கர்
- திருமதி.பு.கணேசதாசன்
- திரு.ம.சிவசீலன்
- திருமதி.க.சிவனேஸ்வரன்
- திருமதி.பா.மோகனராஜ்
- திரு.நா.செந்தில்நாதன்
- திரு.ப.சுதர்சன்
- திருமதி.மே.சிவநாதன்

பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக்குழு

- தலைவர் : திரு.கு.திலீபன்
- செயலாளர் : திரு.த.தர்மசீலன்
- பொருளாளர் : திருமதி.கு.குகதாசன்
- வலயப்பிரதிநிதி : திரு.பா.வாசுதேவன்
- வித்தியாலய பிரதிநிதிகள் : திருமதி.ய.ஸ்ரீகுமார்
  திரு.சு.ஜெயஸ்ரீ
  திரு.ப.சுதர்சன்
  திருமதி.க.விமலநாதன்
  திருமதி.சி.திருமாறன்
  திருமதி.பா.மோகனராஜ்
  திரு.கு.பிரதீபன்
  திருமதி.க.சிவனேஸ்வரன்
- பெற்றோர் பிரதிநிதிகள் : திரு. துஸ்யந்தன்
  திருமதி.ர.சுபந்தினி

2025 ஆம் ஆண்டு புதிதாக எம்மோடு இணைந்தோர் விபரம்

1. திரு.நாகையா செந்தில்நாதன்
2. திருமதி. பாலரஜனி குகநேசன்
3. திருமதி. சுதமதி ஸ்ரீதரன்
4. திரு. புஸ்பரத்தினம் கமலாகரன்
5. திரு. பெனடிக் ஜெப்ரி நிரேசன்
6. திருமதி. கீதாஞ்சலி சுகந்தன்
7. திரு.பரந்தாமன் சுதர்சன்
8. திருமதி. செல்வாஜினி ஜெயதாசன்
9. திருமதி. பொற்செல்வி திருச்செல்வம் (தற்காலிக இணைப்பு)

2025 ஆம் ஆண்டு இடமாற்றம் பெற்றுச் சென்றோர் விபரம்

1. திருமதி. நிசாந்தினி இலட்சராஜ்
2. திருமதி. பரீதா இராசவிசாகன்
3. திருமதி. ஷாமிலா குகநாதன்
4. திருமதி. நவமணி ராஜகுமார்

இந்துமாமன்றம்

தலைவர் : ம.சதுர்சன்
செயலாளர் : சி.அபிரா
பொறுப்பாசிரியர் : திரு.வ.சுந்தரராஜன்

எமது பாடசாலையின் மேற்படி மன்றமானது மாணவர்களது உடல், உள, சமூக, ஆன்மீக மேம்பாட்டினை நோக்காகக் கொண்டு செயற்பட்டு வருகின்றது. வெள்ளிதோறும் சிறப்பான காலைப்பிரார்த்தனையும், தைப்பொங்கல் விழா, நால்வரது குருபூசைத் தினங்கள், நவராத்திரி விழா என்பவற்றை சிறப்பாக நிறைவேற்றியதுடன் ஆலய மகோற்சவகால பரீட்சைகளிலும், பங்குபற்றி மாணவர்கள் பரிசில்களினைப் பெற்றுள்ளனர்.

கிறிஸ்தவ மன்றம்

தலைவர் : சோ.இவாஞ்சலின்
செயலாளர் : பி.கிஷாரா
பொறுப்பாசிரியர் : திருமதி.மே.சிவநாதன்

மேற்படி மன்றமானது தினமும் காலைப்பிரார்த்தனைகளை நடாத்துவதன் மூலம் இறை பக்தியை வளர்ப்பதற்கும் கிறிஸ்தவ நற்பண்புகளைப் பின்பற்றவும் மாணவர்களை வழிப்படுத்துகின்றது. அத்துடன் வெள்ளிக்கிழமைப் பிரார்த்தனையின் போது திருவிவிலியம் வாசித்தல், நற்சிந்தனைகளை வழங்குதல், வினாவிடைப் போட்டிகளை நடாத்துதல் போன்ற செயற்பாடுகளையும் மேற்கொண்டு வருகின்றது.

தமிழ்மன்றம்

தலைவர் : சி.அபிரா
செயலாளர் : சு.நேமித்தியா
பொறுப்பாசிரியர் : திருமதி.ந.ராஜகுமார்

மொழித்திறன், ஆக்கத்திறன், கலைத்திறன் ஆகியவற்றை மாணவர்களிடையே வளர்த்தெடுக்கும் நோக்கில் இம் மன்றம் செயலாற்றி வருகின்றது. எமது மாணவர்கள் அகில இலங்கை தமிழ்த் தினப் போட்டிகளில் பங்குபற்றி கோட்ட, வலய மாகாண மட்டங்களில் வெற்றிகளைப் பெற்றுள்ளனர். மேலும் நல்லூர் பிரதேச செயலகத்தினூடாக நடாத்தப்படும் அகில இலங்கை கலை இலக்கியப் போட்டிகளிலும் பங்குபற்றி சாதனைகளைப் படைத்துள்ளனர். மாணவர்களின் மொழித்திறன், கலைத்திறன் சார்ந்த நிகழ்வுகள் மாதம் ஒருமுறை காலைப்பிரார்த்தனையின் போது நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

ஆங்கில மன்றம்

தலைவர் : லோ.ராதிகா
செயலாளர் : சோ.இவாஞ்சலின்
பொறுப்பாசிரியர் : திரு.ம.சிவசீலன்

ஆங்கில மன்றமானது வாரந்தோறும் வியாழக்கிழமைகளில் “English only day” செயற்பாட்டை ஒவ்வொரு வகுப்பு மாணவர்களினதும் பங்குபற்றுதலுடன் நடாத்துகின்றது. அச்செயற்பாடுகள் மாணவர்களின் பேச்சுத்திறன், கேட்டல் திறன், முன்வருதன்மை மற்றும் தலைமைத்துவ பண்புகளை வளர்ப்பதற்கு ஏதுவாக உள்ளன. அத்துடன் Scrubble game பயிற்சியும் இடம்பெற்று வருகின்றது.

அழகியல் மன்றம்

தலைவர் : செ.கேதுசா
செயலாளர் : ர.சனுசியா
பொறுப்பாசிரியர் : திருமதி.வசந்தகுமாரி அமுதபாலன்

எமது அழகியல் மன்றமானது பாடசாலையின் சகல விடயங்களிலும் சிறப்பான பங்களிப்பினை ஆற்றி வருகின்றது. பாடசாலையின் காலைப் பிரார்த்தனை இறைவணக்கத்திலிருந்து பாடசாலைக்கீதம் வரைக்கும் இடம்பெறும். ஆடல், பாடல்கள் மாணவர்களின் அளுமைப்பண்பினை விருத்தி செய்கின்றனவாய் அமைகின்றன.

சிறுவர் சித்திரம். தமிழ்த்தினப்போட்டி, அகில இலங்கை கர்நாடக இசைப்போட்டி, பிரதேச கலை இலக்கியப் போட்டிகளில் மாணவர்கள் பங்குபற்றி வலய, மாகாண மட்டத்தில் வெற்றியீட்டியமை எமது மன்றத்தின் செயற்பாட்டைப் பறைசாற்றுவனவாய் அமைகின்றன. இதைத்தவிர எமது மேலைத்தேய இசைக்குழு, இன்னியம் போன்றன வரவேற்பு நிகழ்வுகளிலும் பங்கேற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். இசை, நடனம், நாடகம், சித்திரம் ஆகிய துறைகள் சிறப்பாக இயங்கி வருவது சிறப்பம்சமாகும்.

கணித விஞ்ஞான மன்றம்

தலைவர் : சி.அனுசா
செயலாளர் : ந.ஹானுசன்
பொறுப்பாசிரியர் : திருமதி.உதயராணி ரமேஷ்

மாணவர்களின் கணித மற்றும் விஞ்ஞான அறிவு , சிந்தனைத் திறன், படைப்பாற்றல் மற்றும் ஆராய்ச்சி மனப்பாங்கை மேம்படுத்தும் நோக்குடன் பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது. கணித மற்றும் விஞ்ஞான மன்றத்தினால் வினாடிவினாப் போட்டிகள், கணிதத் திறன் போட்டிகள், விஞ்ஞான கண்காட்சி, பரிசோதனை விளக்கக்காட்சிகள், கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள் என்பன நடாத்தப்பட்டன. மாணவர்களின் ஆராய்ச்சித்திறனை ஊக்குவிக்கும் வகையில் குழச் செயற்பாடுகள், மாதிரி உருவாக்கப்போட்டிகள் மற்றும் புதுமையான விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களை அறிமுகப்படுத்தும் நிகழ்ச்சிகளும் ஏற்பாடு செய்யப்பட்டன. வலய மற்றும் தேசிய மட்டப் போட்களில் மாணவர்கள் பங்கேற்க வழிகாட்டல்களும், பயிற்சிகளும் வழங்கப்பட்டன. எதிர்காலத்தில் மேலும் பல தரமான கல்விசார் செயற்பாடுகளை முன்னெடுத்து மாணவர்களின் திறன்களை மேம்படுத்த கணித விஞ்ஞான மன்றம் உறுதியுடன் செயற்படும்.

சமூக விஞ்ஞான மன்றம்

தலைவர் : கெ.லோஜிகா
செயலாளர் : யோ.பானுஜா
பொறுப்பாசிரியர் : திருமதி.பா.மோகனராஜ்

சமூக அறிவை மாணவர்களிடையே வளர்க்கும் நோக்குடன் இம்மன்றம் செயற்படுகின்றது. வாரந்தோறும் இடம்பெறும் காலைப்பிரார்த்தனையின் போது செவ்வாய்க்கிழமைகளில் மாணவர்களினால் வரலாறு, புவியியல், குடியுரிமை, அரசியல், பொருளியல் தொடர்பான அண்மைக்கால புவியியல் சார் விடயங்கள், உலகியல் விடயங்கள் கூறப்படுகின்றன.

தர ரீதியாக சமூக விஞ்ஞானப் போட்டிகளை நடாத்தி கோட்டமட்டத்தில் முதலாம் இடங்கள் மூன்று, இரண்டாம் இடங்கள் ஆறு, மூன்றாம் இடங்கள் மூன்றினையும் பெற்றுக்கொண்டனர். இனிவரும் காலங்களில் வலய, மாகாண மட்டத்தில் வெற்றிபெற ஊக்கம் அளித்து வருகின்ற மன்றமாக செயற்படுகிறது.

வணிக மன்றம்

தலைவர் : றா.சாருகான்
செயலாளர் : பு.டதுர்சிகா
பொறுப்பாசிரியர் : திரு. கு.பிரதீபன்

எமது வித்தியாலய வணிக மன்ற செயற்பாடானது மிகவும் சிறப்பாக நடைபெற்றுவருவதுடன் வணிக உலகிற்கு பொருத்தமான வகையில் மாணவர்களை உருவாக்குவதில் முனைப்பாக செயற்பட்டு வருகின்றது.வருடாந்த வணிக தினத்தினை மிகவும் சிறப்பாக கொண்டாடி வருவதுடன் அது தொடர்பான அறிக்கை பேணப்பட்டு வருகின்றது.மேலும் காலைப்பிரார்த்தனையின் போது வணிகமன்ற செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதுடன் மாணவர்களுக்கு வணிகம் தொடர்பான அறிவினையூட்டி வருகின்றது மட்டுமல்லாது வணிக மன்றம் அறிவுறுத்தல்களை வழங்கி வருடாந்த சந்தை நிகழ்வுகளும் சிறப்பாக நடைபெற்று வருகின்றது.மேலும், கோட்டமட்ட , வலயமட்ட வணிகப் போட்டிகளில் பங்குபற்றி மாணவர்கள் பரிசில்களையும் பெற்று வருகின்றமை பாராட்டத்தக்க விடயம் ஆகும்.

சுகாதார மன்றம்

தலைவர் : இ.மயூரன்
செயலாளர் : கு.பிரதீஸ்
பொறுப்பாசிரியர் : திருமதி.பா.குகநேசன்

பாடசாலையில் காலையில் உடற்பயிற்சி செயற்பாடுகள் நான்கு நாட்கள் நடைபெற்று வருகின்றன. காலைப் பிரார்த்தனையின் பின்பு மாணவர்களின் உடற் சுத்தம் பார்வையிடப்பட்டு பேணப்பட்டன. இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை ஆசிரியர்கள், மாணவர்களின் உதவியுடன் சிரமதானம் மேற்கொள்ளப்பட்டது. தவணை ஆரம்பத்தில் மாணவர்களின் உயரம், நிறை அளக்கப்பட்டு உடற்திணிவுச்சுட்டி கணிப்பதோடு, உடற்திணிவுச்சுட்டி கூடிய குறைந்த மாணவர்களுக்கு போசணை தொடர்பான விழிப்புணர்வுகள் வழங்கப்பட்டன. கடந்த ஆண்டு வைகாசி மாதத்தில் இருந்து மாணவர்களுக்கு ஒவ்வொரு வாரமும் போலிக்கமிலம், விற்றமின் C மாத்திரைகள் வழங்கப்பட்டு வருகின்றது. வைத்திய அதிகாரி பொதுச் சுகாதார பரிசோதகரால் மாணவர்களின் கண்கள், பற்கள், BMI பரிசோதிக்கப்படுவதற்கும், தரம் 1 , தரம் 4, தரம் 7, தரம் 10 மணவர்களுக்கும் தரம் ஆறு மாணவிகளுக்கும் தடுப்பூசி வழங்குவதற்கும் இக்கழகம் உதவி புரிகின்றது. மற்றும் காலைப் பிரார்த்தனையின் போது மன்றச்செயற்பாடுகளில் எமது மன்றமும் நிகழ்ச்சிகளை வழங்கிவருகின்றன.

வழிகாட்டல் ஆலோசனை அலகு

எமது பாடசாலையில் வழிகாட்டல் ஆலோசனை அலகு வினைத்திறனாக இயங்கி வருகின்றது. வழிகாட்டல் ஆலோசனை அலகிற்கு பிரத்தியேகமான அறை ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்வலகிற்கு திருமதி. ராதிகா துஸ்யந்தன் பொறுப்பாக உள்ளார். வழிகாட்டல் ஆலோசனை அறையினுள்

மாணவர்களுக்கு சம காலத்துக்கு வேண்டிய பொருத்தமான கருத்தாழமுள்ள படங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன் தொழில் வழிகாட்டல் தொடர்பான சுவரொட்டிகளும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றை மாணவர்கள் பார்வையிட்டு பயன்பெற்று வருகின்றனர் இவ்வலகினால் மாணவர் தொடர்ச்சியான வரவின்மை, தாமத வருகை உடைய மாணவர் வரவுகள், மாணவர் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கான தீர்வுகள், பதிலீட்டுக் கடமைகள் வகுப்பு ரீதியாகவும் இடம்பெற்று வருகின்றன. அத்துடன் வழிகாட்டல் ஆலோசனைக் குழுவால் உளநல வாரம், போதைப் பொருள் எதிர்ப்பு தினம் "ரட்ட எக்கடம" போதைப்பொருள் ஒழிப்பு வேலைத்திட்டம் என்பன மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் கொண்டாடப்பட்டு வருகின்றது. உளநல வாரத்திற்கான ஆக்கங்கள், செயற்பாடுகள் மாணவர்கள் தாமாக முன்வந்து செய்கின்றமை வரவேற்கத்தக்க விடயமாகும். மாணவர் நலன்புரி சார்ந்த வேலைத்திட்டங்களும் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

சுற்றாடல் மாணவர் படையணி

தலைவர் : ய.சானுகா
செயலாளர் : பி.ஆகாஷ்
பொறுப்பாசிரியர் : திருமதி.ச.புவிராஜன்

2025 ஆம் ஆண்டில் தரம் 6 ஐச் சேர்ந்த 24 மாணவர்கள் சுற்றாடல் மாணவர் படையணியில் புதிதாக இணைந்து கொண்டனர். இம் மாணவர்கள் தமது சுற்றாடல் சார் அனைத்து செயற்பாடுகளையும் பூர்த்தி செய்த தமது சுற்றாடல் முன்னோடி பதக்கத்திற்காக ஆர்வத்துடன் காத்திருக்கின்றார்கள். மேலும் தரம் 1, 2 ஐச் சேர்ந்த 25 மாணவர்கள் தாவர பதக்கத்திற்காக பரிந்துரைக்கப்பட்டுள்ளனர். எமது பாடசாலையில் இடம்பெற்ற அனைத்து சிரமதானங்கள், பாதீனிய ஒழிப்பு நடவடிக்கைகள், டெங்கு ஒழிப்பு செயற்றிட்டங்கள், மரம் நடுகைச் செயற்பாடுகள், பொலித்தீன் பாவனைத் தடை போன்ற அனைத்து சுற்றாடல் சார் நடவடிக்கைகளிலும் இம் மாணவர் படையணியினர் தமது திடகாத்திரமான பங்களிப்பை வழங்கியுள்ளனர்.

உணவுக்குழு

அரசாங்கத்தின் உணவு வழங்கும் செயற்றிட்டத்தின் ஊடாக எமது பாடசாலையில் தரம் 1-5 வரையான 125 மாணவர்களுக்கு போஷாக்குணவு வழங்கப்பட்டு வருகின்றது. இதில் மரக்கறிகள், கீரை வகைகள், பால், பழம் என்பன சேர்க்கப்பட்டு தரமான வகையில் அளவுத்திட்டத்தின் படி சமமான அளவில் உணவு வழங்கப்படுகின்றது. மாணவர்களின் போசாக்கு மட்டத்தை அதிகரிக்கும் நோக்கில் உணவு வழங்கும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதில் உணவுக்குழு உறுப்பினர்கள், வகுப்பாசிரியர்களின் மேற்பார்வையும் சிறப்பாக இடம்பெறுவதால் மாணவர்கள் அனைவரும் உணவை விரும்பி சாப்பிடுகின்றனர்.

மாணவர் பாராளுமன்றம்

நிர்வாகக் கட்டமைப்பு

சபாநாயகர் : சூ.லோஜிகன்

பிரதமர் : து.தருண்

சபைமுதல்வர் : லோ ராதிகா

நிறைவேற்று சபை

செயலாளர் நாயகம் : திரு.க.திலீபன்

பிரதி செயலாளர் நாயகம் (நிர்வாகம்): திருமதி.பா.மோகனராஜ்

அபிவிருத்தி : திருமதி.மி.ஜெயகாந்தன்

ஒழுக்கம் : திருமதி.கீ.சுகந்தன்

எமது பாடசாலையின் மாணவர் பாராளுமன்றத்தில் பத்து அமைச்சுக்கள் காணப்படுகின்றன. ஒவ்வொரு அமைச்சுக்களினூடாகவும் பாடசாலையின் நலன் கருதி பல்வேறு செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அவற்றிற்கு தேவையான பங்களிப்புக்களை எமது மாணவர் பாராளுமன்ற அமைச்சு நிறைவேற்றி வருகின்றது.

நூலகம்

எமது பாடசாலை நூலகம் 30x20 அளவு விஸ்தீரணம் கொண்ட நிரந்தர கட்டடத்தில் அமைந்துள்ளது. இங்கு ஏறத்தாழ 3500 இற்கும் மேற்பட்ட நூல்கள் உள்ளன. நூலகப் பொறுப்பாசிரியராக திருமதி.இரஞ்சினி கணேசதேவா செயற்படுகின்றார்

தரம் 1 தொடக்கம் 13 வரையான மாணவர்கள் நூலகத்தைப் பயன்படுத்தி வருவதுடன் ஆசிரியர்களும் தமது கற்றல் கற்பித்தல் வளநிலையமாக பயன்படுத்தி வருகின்றனர்.

ஒவ்வொரு வருடமும் பாடசாலை மட்டத்தில் தேசிய வாசிப்பு மாத நிகழ்வுகள் நடாத்தப்படுகின்றன. ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கான வாசிப்பு முகாமும் வருடம் தோறும் நடைபெற்று வருகின்றன. நல்லூர் பிரதேச சபையால் வருடந்தோறும் நடாத்தப்படும் தேசிய வாசிப்பு மாதப் போட்டிகளில் எமது பாடசாலையைச் சேர்ந்த 22 மாணவர்கள் வெற்றி பெற்று சான்றிதழையும் கேடயத்தையும் பெற்றுக்கொண்டனர்.

2025 ஆம் ஆண்டு தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையால் தேசிய வாசிப்பு மாத நிகழ்வுகளை சிறப்பாக ஒழுங்கமைத்த பாடசாலைகளுக்கான போட்டியில் எமது பாடசாலை மூன்றாம் இடத்தைப் பெற்று தேசிய விருதினைப் பெற்றுக்கொண்டது.

உயர்தர மாணவர் மன்றம்

க.பொ.த உயர்தர வகுப்பில் கல்வி கற்கும் மாணவர்களை உள்ளடக்கியதாக இம்மன்றம் விளங்குகின்றது. உயர்தர வகுப்பு மாணவர்களை சமூகத்துடன் ஒன்றிணைக்கும் வகையில் ஆக்கபூர்வமான செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது. மாணவரிடையே எதிர்காலத்தில் அடையவேண்டிய திறன்கள், ஆளுமைகள், தேர்ச்சிகள் என்பவற்றை வளர்க்கும் பொருட்டு புலமை சார்ந்த அறிஞர்கள், சமூக நிறுவனத் தலைவர்களின் உதவியோடு பல செயலமர்வுகள், சொற்பொழிவுகள் என்பவற்றை ஒழுங்கு செய்து வருகின்றது. வாரந்தோறும் ‘‘பத்திரிகைக்

கண்ணோட்டம்'' எனும் செயற்பாட்டை ஆற்றி வருகின்றது. அயற்பாடசாலைகளில் உயர்தர மாணவர்களின் ஒன்றுகூடல் நிகழ்வுகள் இடம்பெறும் போது மாணவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்து ஒத்துழைத்து வருகின்றனர்.

ஆளணி விபரம் 2025

இல	ஆசிரியர் பெயர்	பதவி	கல்வித் தகைமை	தொழிற்தகைமை	தரம்
01	திரு.குலசிங்கம் திலீபன்	அதிபர்	BA	NDT,MA,PGDE,MED,PGDEM	SLPS II
02	திருமதி.யசோதா.ஸ்ரீகுமார்	பிரதி அதிபர்	G.C.E.A/L	NDT	SLPS III
03	திருமதி.பரிதா.இராசவிசாகன்	ஆசிரியர்	BA		SLTS I
04	திருமதி.காமினி.ரவீதரன்	ஆசிரியர்	G.C.E.A/L	TRAINED	SLTS I
05	திருமதி.நேசமலர்.இரவீந்திரன்	ஆசிரியர்	G.C.E.A/L	TRAINED	SLTS I
06	திருமதி.தமிழினி.இராசேஸ்வரன்	ஆசிரியர்	BA	PGDE	SLTS- I
07	திருமதி.தீபா.சதீஸ்குமார்	ஆசிரியர்	G.C.E.A/L	BED	SLTS 2-II
08	திருமதி.இந்திராணி.உருத்திரன்	ஆசிரியர்	BA	PGDE	SLTS I
09	திருமதி.கஜேந்திரராணி.குகதாசன்	ஆசிரியர்	B.COM	DIP IN EDUCATION. MED	SLTS I
10	திருமதி.திலகா.விமலநாதன்	ஆசிரியர்	B.COM	PGDE	SLTS I
11	திருமதி.மேரி அனிற்ரா சிவநாதன்	ஆசிரியர்	G.C.E.A/L	Trained	SLTS I
12	திருமதி.பாலசுந்தரி.மோகனராஜ்	ஆசிரியர்	BA	PGDE	SLTS I
13	திரு.வரதராஜசர்மா.சுந்தரராஜன்	ஆசிரியர்	BA	DIP. IN EDUCATION	SLTS I
14	திருமதி.இரஞ்சினி.கணேசதேவா	ஆசிரியர்	BA	PGDE , MED	SLTS I
15	திருமதி.சசிதா.ஜனார்த்தன்	ஆசிரியர்	BFA , MFA	PGDE	SLTS 2 I
16	திருமதி.நவமணி.ராஜகுமார்	ஆசிரியர்	BA	PGDE, MED, M.PHIL	SLTS I
17	திருமதி.கவிதா.சிவனேஸ்வரன்	ஆசிரியர்	BEd	DIP.IN TEACHING	SLTS I
18	திருமதி.மிதிலா.ஜெயகாந்தன்	ஆசிரியர்	BA	PGDE	SLTS 2 I
19	திருமதி.சுபத்திரா.இராதாகிருஸ்ணன்	ஆசிரியர்	G.C.E.A/L	Trained	SLTS 2-I
20	திருமதி.சிவமதி.திருமாறன்	ஆசிரியர்	BBA ,MA (EDU)	M.PHIL (EDU) ,PGDE,PGD LIS	SLTS I
21	திரு.சுபஸ்ரீ.ஜயந்த ஜயஸ்ரீ	ஆசிரியர்	BFA	PGDE	SLTS I
22	திருமதி.ராதிகா.துஸ்யந்தன்	ஆசிரியர்	BA	PGDE , MED	SLTS I
23	திரு.மகேந்திரசிங்கம் சிவசீலன்	ஆசிரியர்	BEM	PGDE	SLTS I
24	திருமதி.பிறேமலதா.டிகுகுமார்	ஆசிரியர்	BA	PGDE	SLTS I
25	திருமதி.சாமிலா.குகநாதன்	ஆசிரியர்	BA		SLTS I
26	திருமதி.புனிதமலர் கணேசதாசன்	ஆசிரியர்	BEd	TRAINED	SLTS I
27	திருமதி.நிசாந்தினி.லட்சராஜ்	ஆசிரியர்	BFA		SLTS 2-I
28	திரு.குணரத்தினம். பிரதீபன்	ஆசிரியர்	BBA	PGDE , DIP IN EDUCATION	SLTS 2-I
29	திரு.விஜயபாலசிங்கம் விஜயசங்கர்	ஆசிரியர்	BEd	BEd	SLTS 2-II
30	திருமதி.நிருபா.கமலகரன்	ஆசிரியர்	G.C.E.A/L	DIP IN TEACHING	SLTS 2-II
31	திருமதி.சந்திரவதனி புவிராஜன்	ஆசிரியர்	BSC , MBA	PGDE	SLTS 2-II

32	திருமதி.கிருஷாந்தி.முரளிநாத்	ஆசிரியர்	BEd	NDT , BED	SLTS 2 II
33	திருமதி.பிருந்தா.சிவபாதம்	ஆசிரியர்	G.C.E.A/L	NDT	SLTS 2 II
34	திருமதி.கலைவாணி.விமலநாதன்	ஆசிரியர்	BA	DIP IN EDUCATION	SLTS I
35	திருமதி.உதயராணி.ரமேஸ்	ஆசிரியர்	G.C.E.A/L	BEd	SLTS I
36	திருமதி.சசிகலா.பிரபாகரன்	ஆசிரியர்	BA	PGDE	SLTS I
37	திருமதி.வசந்தகுமாரி.அமுதபாலன்	ஆசிரியர்	BA	DIP IN TEACHING , PGDE	SLTS 2 I
38	செல்வி.அனுசா.ஜெகசோதி	ஆசிரியர்	BFA	MA	SLTS I
39	செல்வி.தயாளினி.அன்னலிங்கம்	ஆசிரியர்	G.C.E.A/L	TRAINED	SLTS 2 I
40	திரு.நாகையா.செந்தில்நாதன்	ஆசிரியர்	ART TRAINED	PGDE, MED	SLTS I
41	திருமதி.பாலரஜனி.குகநேசன்	ஆசிரியர்	GCE A/L	DIP IN TEACHING	SLTS I
42	திருமதி.சுதமதி.ஸ்ரீதரன்	ஆசிரியர்	BFA	PGDE	SLTS I
43	திரு.புஸ்பரத்தினம்.கமலாகரன்	ஆசிரியர்	BSC	PGDE	SLTS I
44	திரு.பெனடிக்ற் ஜெப்றி நிரேசன்	ஆசிரியர்	BEd	BED	SLTS I
45	திருமதி.கீதாஞ்சலி.சுகந்தன்	ஆசிரியர்	BA	PGDE, MED	SLTS I
46	திரு.பரந்தாமன்.சுதர்சன்	ஆசிரியர்	GCE A/L	BED	SLTS I
47	திருமதி.செல்வாஜினி.ஜெயசீலன்	ஆசிரியர்	BA	PGDE	SLTS 2-II
48	திருமதி. வைதேகி செல்மர் எமில்	ஆசிரியர்	BFA	MA	SLTS I
49	திருமதி. இராஜேந்திரன் பொற்செல்வி	ஆசிரியர்	MA	PGDE	SLTS I
50	திரு.சின்னராசா.செந்தூரன்	Coach	G.C.E.A/L	HD IN PSHYSICAL EDUCATION	MN 1
51	திரு.ரவீந்திரராசன்.மயூரன்	Dev. Officer	BBM	MBA (Reading)	III
52	செல்வி.ஜோர்ச் கிளறன்ஸ் தர்சிக்கா	Dev. Officer	BA	----	III
53	திரு.சுந்தரம்.வரபிரசாதம்	Watcher			I

பரிசில் பெறும் மாணவர் விபரம் - 2025

ஆரம்பப்பிரிவு

தரம் : 3

இல	மாணவர் பெயர்	முதலாம் நிலை	இரண்டாம் நிலை	மூன்றாம் நிலை
1	சி.கன்சிகா	கணிதம்	சமயம், தமிழ்	சுற்றாடல்
2	சு. பிரணவி	-------	கணிதம்	
3	ம. பிரக்கியா	-------	சுற்றாடல்	தமிழ், ஆங்கிலம்
4	செ. நியுட்சன்	சமயம், சுற்றாடல், தமிழ்		கணிதம்
5	ச. சதுர்ஸ்ரிகன்			சமயம்
6	ர. ஜெருசான்	கிறிஸ்தவம்	-------	-------
7	யோ. யொயிலின்	கிறிஸ்தவம், ஆங்கிலம்	-------	-------
8	கி. ஆருஜன்	-------	ஆங்கிலம்	-------

தரம் : 4

இல	மாணவர் பெயர்	முதலாம் நிலை	இரண்டாம் நிலை	மூன்றாம் நிலை
1	இ. டிவ்யகீர்த்தனா	தமிழ், கணிதம், சுற்றாடல்	ஆங்கிலம், சமயம்	-------
2	சி. அபிநயன்	-------	தமிழ்,	சுற்றாடல், கணிதம், சமயம்
3	கோ. சர்விஷன்	-------	-------	சமயம், ஆங்கிலம்
4	ஜெ. ரக்ஷனா	ஆங்கிலம்	கணிதம், சுற்றாடல்	தமிழ்
5	ய. பூர்வி	சமயம்	சுற்றாடல்	-------
6	பி. தீபிகா	கிறிஸ்தவம்	-------	-------

தரம் : 5

இல	மாணவர் பெயர்	முதலாம் நிலை	இரண்டாம் நிலை	மூன்றாம் நிலை
1	வி. அக்ஷயா	சுற்றாடல், ஆங்கிலம், தமிழ்,	சமயம்	கணிதம்
2	த. ரஷானா	சமயம்	ஆங்கிலம், சுற்றாடல்	தமிழ்
3	த. ஆரிசன்	-------	கணிதம்	சுற்றாடல்
4	ஜெ. அக்சன்	கணிதம்	தமிழ்	சமயம், சுற்றாடல்
5	ஜெ. தன்சிகா	-------	-------	ஆங்கிலம்

தரம் : 6

இல	மாணவர் பெயர்	முதலாம் நிலை	இரண்டாம் நிலை	மூன்றாம் நிலை
1	ஜ. சானுகா	சமயம், தமிழ், வரலாறு, புவியியல், செய்முறைத் தொழில்நுட்பம், சுகாதாரம், ICT, நடனம்	விஞ்ஞானம், ஆங்கிலம், குடியுரிமை,	-------
2	த. ஹர்சித்	ஆங்கிலம், குடியுரிமை, சிங்களம், சித்திரம்	புவியியல்,	வரலாறு, சுகாதாரம்,
3	க. பவின்சன்	விஞ்ஞானம்,	வரலாறு, சுகாதாரம்,	தமிழ், செய்முறைத் தொழில்நுட்பம், குடியுரிமை,
4	நிவேஸ்க்கர்	நாடகம்	ICT	விஞ்ஞானம், புவியியல், செய்முறைத் தொழில்நுட்பம்
5	பி. ஆகாஸ்	கணிதம்,	-------	-------
6	இ. வைஸ்ணவி	கிறிஸ்தவம்	-------	-------
7	தி. ருக்ஷா	சங்கீதம்	-------	-------
8	த. ரவீன்சா	--------	தமிழ்,	ICT, கணிதம், சிங்களம்
9	ச. சஹானா	--------	சமயம்	ஆங்கிலம்,
10	ஸ். நிகித்தா	--------	கணிதம்,	--------
11	டெ. பிஸ்ரிகா		சிங்களம்	--------
12	நி. கஸ்மீகா	--------	--------	சமயம்

தரம் : 7

இல	மாணவர் பெயர்	முதலாம் நிலை	இரண்டாம் நிலை	மூன்றாம் நிலை
1	ர. ஜெருசா	கிறிஸ்தவம், தமிழ், கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், குடியுரிமை, சங்கீதம், ICT, சிங்களம்,	வரலாறு, சுகாதாரம், செய்முறைத் தொழில்நுட்பம்	புவியியல்
2	ச. ஹன்சிகா	வரலாறு, செய்முறைத் தொழில்நுட்பம், நடனம்	சமயம், கணிதம், விஞ்ஞானம், குடியுரிமை, சிங்களம், புவியியல்	தமிழ், ICT, சுகாதாரம்,
3	வி. மேனுஜா	சமயம், சுகாதாரம், புவியியல், சங்கீதம்	தமிழ், ICT,	குடியுரிமை, வரலாறு, செய்முறைத் தொழில்நுட்பம, சிங்களம்
4	ந. நவினா	சித்திரம்	-------	-------
5	ப. வர்மீகன்	நாடகம்	-------	-------
6	ஜீ கவிசன்	-------	ஆங்கிலம்,	-------
7	யோ. தீபிகா	-------	-------	கணிதம், ஆங்கிலம், சிங்களம்,
8	பா. சபரீஷன்	-------	-------	விஞ்ஞானம்,
9	மோ. அபிஷனா	-------	-------	சமயம்

தரம் : 8

இல	மாணவர் பெயர்	முதலாம் நிலை	இரண்டாம் நிலை	மூன்றாம் நிலை
1	ம. யுனிஸ்ரா	சமயம், தமிழ், கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், வரலாறு, புவியியல், குடியுரிமை, சுகாதாரம், செய்முறைத் தொழில்நுட்பம், ICT, சிங்களம், நாடகம்,	-------	-------
2	பி. அபிஷனா	-------	கணிதம், சுகாதாரம்	சமயம், தமிழ், விஞ்ஞானம், புவியியல், குடியுரிமை, செய்முறைத் தொழில்நுட்பம், ICT, சிங்களம்
3	ரா. தீபிகா	சித்திரம்,	குடியுரிமை, ICT, சிங்களம்	வரலாறு, சுகாதாரம்
4	தி. சாருகா	நடனம்	ஆங்கிலம்	-------
5	து. சங்கவி		சமயம், தமிழ், விஞ்ஞானம், வரலாறு, புவியியல், செய்முறைத் தொழில்நுட்பம்	ஆங்கிலம்
6	சு. திர்சாளினி	சங்கீதம்	-------	-------
7	ச. லதுர்சன்	-------	-------	கணிதம்

தரம் : 9

இல	மாணவர் பெயர்	முதலாம் நிலை	இரண்டாம் நிலை	மூன்றாம் நிலை
1	ஜெ. தஸ்மிகா	தமிழ், சமயம், ஆங்கிலம், விஞ்ஞானம், வரலாறு, புவியியல், குடியுரிமை, சுகாதாரம், சிங்களம், ICT, சங்கீதம்	கணிதம், செய்முறைத் தொழில்நுட்பம்	-------
2	பா. சுஜானி	கணிதம், சுகாதாரம், செய்முறைத் தொழில்நுட்பம், நடனம்	சமயம்	தமிழ், விஞ்ஞானம், ICT
3	எ. அபிசன்	நாடகம்	தமிழ்	சுகாதாரம்
4	ரா. திரிஷா	கிறிஸ்தவம்	சிங்களம்	
5	ச. பிரித்தி	-------	ஆங்கிலம், விஞ்ஞானம்	புவியியல், சிங்களம்
6	ஜெ. தணிகா	-------	புவியியல், குடியுரிமை	ஆங்கிலம், சமயம், கணிதம், வரலாறு
7	வி. சாயுக்தன்	சித்திரம்	-------	
8	அ. சர்மினி	-------	சுகாதாரம்	குடியுரிமை
9	உ. பூர்வி	-------	வரலாறு, ICT	-------
10	ச. சஸ்மிதா	-------	-------	செய்முறைத் தொழில்நுட்பம்

தரம் : 10

இல	மாணவர் பெயர்	முதலாம் நிலை	இரண்டாம் நிலை	மூன்றாம் நிலை
1	ச. ஷர்ஜீனா	சமயம், தமிழ், வரலாறு, சங்கீதம், சுகாதாரம்	-------	விஞ்ஞானம்
2	பி. கிஷாரா	கிறிஸ்தவம், வணிகம்	விஞ்ஞானம், வரலாறு	தமிழ்
3	சி. அனுசியா	விஞ்ஞானம்	தமிழ், கணிதம்	சமயம், ஆங்கிலம்
4	ந. ஹானுசன்	கணிதம், ஆங்கிலம், ICT	-------	வரலாறு
5	யோ. பானுஜா	-------	சமயம், ஆங்கிலம்	கணிதம்
6	ர. பிரித்திகா	நடனம்	-------	-------
7	நி. நிருஜிகான்	சித்திரம்	-------	-------
8	மு. பிரதீஸ்	விவசாயம்	-------	-------
9	ர. ரஸ்மிதன்	நாடகம்	-------	-------
10	இ. திரிஷா	புவியியல்	-------	-------

தரம் : 11

இல	மாணவர் பெயர்	முதலாம் நிலை	இரண்டாம் நிலை	மூன்றாம் நிலை
1	ச. தினுஜா	சமயம், தமிழ். கணிதம், வரலாறு, ஆங்கிலம், வணிகம், நடனம்	விஞ்ஞானம்	-------
2	சோ. இவாஞ்சலின்	வரலாறு, கிறிஸ்தவம், சித்திரம்	தமிழ், கணிதம், ஆங்கிலம்	விஞ்ஞானம்
3	சி. அபிநயா	கணிதம், விஞ்ஞானம், சங்கிதம், ICT	சமயம்	தமிழ்
4	அ. சியானா	குடியுரிமை, சுகாதாரம்	வரலாறு	சமயம்
5	செ. பிரணவன்	-------	-------	வரலாறு, ஆங்கிலம், கணிதம்
6	து. தருண்	நாடகம்	-------	-------
7	உ. அபிநயா	புவியியல்	-------	-------

க.பொ.த உயர்தரம் - 2027

வர்த்தகப் பிரிவு

இல	மாணவர் பெயர்	முதலாம் நிலை
1	சி.சந்தியா	கணக்கீடு, பொருளியல்
2	அ.திவ்யா	ICT

க.பொ.த உயர்தரம் - 2027

கலைப் பிரிவு

இல	மாணவர் பெயர்	முதலாம் நிலை
1	ப. அனிற்றா	தமிழ், சங்கீதம்
2	செ. கேதுசா	புவியியல்
3	கெ. லோஜிதா	சித்திரம்

க.பொ.த உயர்தரம் - 2026

வர்த்தகப் பிரிவு

இல	மாணவர் பெயர்	முதலாம் நிலை
1	பு. டதுர்சிகா	கணக்கீடு, வணிகம்
2	ரா. சாருகான்	பொருளியல், ICT

க.பொ.த உயர்தரம் - 2026

கலைப் பிரிவு

இல	மாணவர் பெயர்	முதலாம் நிலை
1	ம. சதுர்சன்	வரலாறு, இந்து நாகரீகம், நாடகம்
2	சு. நேமித்தியா	தமிழ், அரசியல் விஞ்ஞானம்
3	பா. விதுசா	நடனம்
4	இ. விஜயகுமார்	சித்திரம்

இணைபாடவிதான வெற்றிகள்

இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு 2025

கோட்ட மட்டம்

மாணவர் பெயர்	பிரிவு	விபரம்	கோட்ட மட்டம்	வலய மட்டம்
ர. அஸ்வின்	12 வயது	உயரம் பாய்தல்	1	
க.வருன்சிகா	12 வயது	உயரம் பாய்தல்	3	
வ.நஸ்மீரா	16 வயது	ஈட்டி எறிதல்	3	3
இ.யானுஜன்	20 வயது	ஈட்டி எறிதல்	3	
மு.பவின்சன்	20 வயது	100 M ஓட்டம் 200 M ஓட்டம்	3 2	
சி.பிரியந்திகா	20 வயது	100 M ஓட்டம் 800 M ஓட்டம்	2 2	….. 3

மாணவர் பெயர்	பிரிவு	விபரம்	கோட்ட மட்டம்
பி.சஞ்சித்	தரம் 3	செயற்பட்டு மகிழ்வோம்	3
செ.நியுட்சன்			
து.இராகுல்			
சி.சிபிராஜ்			
ஸ்ரீ.சுஜன்			
ச.சதுர்ஸ்ரிகன்			
சு.பிரணவி			
ம.பிரக்கிஜா			
சு.கன்சிகா			
ஆ.அபிசா			
யோ.யொஜிலின்			
யே.தெபோரா			

மாணவர் பெயர்	பிரிவு	விபரம்	கோட்ட மட்டம்
அ.அதிசயன்	தரம் 4	செயற்பட்டு மகிழ்வோம்	1
டெ.டிஸ்ரிகன்			
சு.அஸ்வின்			
கோ.சர்விசன்			
ர.பிரவீன்			
சி.அபிநயன்			
பி.தீபிகா			
பி.நிந்துஜா			
சி.மேதிசா			
ச.சனுஸ்த்தா			
ய.பூர்வி			
ரெ.ரக்சனா			

மாணவர் பெயர்	பிரிவு	விபரம்	கோட்ட மட்டம்
செ.யதுர்ஷன்	தரம் 5	செயற்பட்டு மகிழ்வோம்	1
ஜ.கிருசிகன்			
த.ஆரிஷன்			
ஜெ.அக்ஷன்			
ஜீ.ஜெஸ்மன்			
பி.பவிசன்			
வி.அக்ஷயா			
வி.ஜஸ்மீனா			
த.ரஷானா			
க.கிசாந்தினி			
ஜெ.தண்சிகா			
க.ஷமீலா			

தமிழ்த் தினப் போட்டி

மாணவர் பெயர்	பிரிவு	விபரம்	கோட்ட மட்டம்	வலய மட்டம்
உ.அபினயா	பிரிவு IV	கட்டுரை வரைதல்	3	
சி.அபிரா	பிரிவு V	கட்டரை வரைதல்	2	
ச.தினுஜா	பிரிவு IV	இலக்கணப் போட்டி	3	
சி.அனுசியா	பிரிவு IV	குறுநாடக ஆக்கம்	1	3
ம.சதுர்சன்	பிரிவு V	குறுநாடக ஆக்கம்	2	
மோஅபிசனா	பிரிவு II	பாவோதல்	1	1
ஜெ.தஸ்மியா	பிரிவு III	பாவோதல்	2	
சி.அபினயா	பிரிவு IV	இசை தனி	3	
வி.தீபிகா	பிரிவு V	இசைதனி	3	
து.தருண்	பிரிவு IV	தனி நடிப்பு	2	
சூ.லோஜிகன்	பிரிவு V	பேச்சு	2	
ர.சனுசியா	பிரிவு II	இசை – குழு (தரம் 10,11,12)	3	
உ.அபினயா				
வி.விதுர்சிகா				
வி.தீபிகா				
சி.அபினயா				
ரி.சாளினி				
அ.சியானா				
ப.லக்சனா				

ஆங்கில தினப் போட்டி

மாணவர் பெயர்	பிரிவு	விபரம்	கோட்ட மட்டம்
சி.அனுசியா	தரம் 10	Hand Writing	2
ர.ஜெருசா	தரம் 7	Hand Writing	3

சமூக விஞ்ஞானப் போட்டி

மாணவர் பெயர்	பிரிவு	விபரம்	நிலை
ஜெ.சானுசா	தரம் 6	சமூக விஞ்ஞானப் போட்டி	1
த.ஹர்சித்	தரம் 6	சமூக விஞ்ஞானப் போட்டி	3
ச.ஹன்சிகா	தரம் 7	சமூக விஞ்ஞானப் போட்டி	2
ர.ஜெருசா	தரம் 7	சமூக விஞ்ஞானப் போட்டி	3
ம.யுனிஸ்ரா	தரம் 8	சமூக விஞ்ஞானப் போட்டி	1
து.சங்கவி	தரம் 8	சமூக விஞ்ஞானப் போட்டி	2
ஜெ.தஸ்மியா	தரம் 9	சமூக விஞ்ஞானப் போட்டி	1
உ.பூர்விகா	தரம் 9	சமூக விஞ்ஞானப் போட்டி	2
ஜெ.தணிகா	தரம் 9	சமூக விஞ்ஞானப் போட்டி	3
பி.கிஷாரா	தரம் 10	சமூக விஞ்ஞானப் போட்டி	2
ர.ஷர்ஜீனா	தரம் 10	சமூக விஞ்ஞானப் போட்டி	3
ச.தினுஜா	தரம் 11	சமூக விஞ்ஞானப் போட்டி	1
சோ.இவான்சலின்	தரம் 11	சமூக விஞ்ஞானப் போட்டி	3

நோஜல் கல்லூரி மாணவர் மன்றத்தினுடைய அகில இலங்கை நாடகப் போட்டி – குழு தேசிய மட்டம் 2ம் இடம்

மாணவர் பெயர்
ந. சாருகான்
ம. சதுர்சன்
து. தருண்
சி. அனுசியா
சோ. இவாஞ்சலின்

நோஜல் கல்லூரி மாணவர் மன்றத்தினுடைய அகில இலங்கை நாடகப் போட்டி – தனி
தேசிய மட்டம் 3ம் இடம்

மாணவர் பெயர்
ம. சதுர்சன்

அகில இலங்கை சித்திரப் போட்டி

மாணவர் பெயர்	நிலை
அ.லக்ஜினி	மாகாண மட்டம் முதலாம் இடம்

தேசிய கலை இலக்கியப்போட்டி பிரதேச செயலகம் நல்லூர் சிறுவர் பிரிவு

மாணவர் பெயர்	தரம்	விபரம்	மாவட்ட மட்டம்	பிரதேச மட்டம்
ர.சனுசியா	10	பாடல் நயத்தல்	1ம் இடம்	
சூ. லோஜிதன்	13	பாடல் நயத்தல்	2ம் இடம்	
மோ. அபிசனா	07	பாடல் நயத்தல்		1ம் இடம்
வி. மேனுயா	07	பாடல் நயத்தல்		2ம் இடம்
ர. ஜெருசா	07	பாடல் நயத்தல்		3ம் இடம்
மோ. அக்சரா	10	பாடல் நயத்தல்		2ம் இடம்
செ. பிரணவன்	11	பாடல் நயத்தல்		3ம் இடம்
சோ. இவாஞ்சலின்	11	பாடல் நயத்தல்		3ம் இடம்
ச. தினுஜா	11	புதுக்கவிதை		1ம் இடம்
சி. அபினயா	11	புதுக்கவிதை		2ம் இடம்
உ. அபினயா	11	புதுக்கவிதை		3ம் இடம்
சி. அபிரா	12	இலக்கிய விமர்சனம்		1ம் இடம்
வி. தீபிகா	12	மரபுக்கவிதை		1ம் இடம்
பி. சுஜிதப்பிரியா	13	பாடல்ரசனை		1ம் இடம்
பா. விதுசா	12	பாடல்ரசனை		2ம் இடம்
லோ. ராதிகா	12	சிறுகதை		1ம் இடம்
ர. ஜெருசான்	03	சிறுகதை ஆக்கம்		1ம் இடம்
இ. டிவ்வியகீர்த்தனா	04	சிறுகதை ஆக்கம்		2ம் இடம்
வி. அக்சயா	05	சிறுகதை ஆக்கம்		3ம் இடம்

தேசிய வாசிப்பு மாதப் போட்டி பிரதேச செயலகம் நல்லூர் சிறுவர் பிரிவு

மாணவர் பெயர்	தரம்	விபரம்	பிரதேச மட்டம்
வ.வதுமிகா	1	புதிய ஆத்திசூடி	2
ர.பியாஸ்	1	புதிய ஆத்திசூடி	3
வ.நிதுர்சா	2	நுபெடளா சுநயனபை	2
சி.கெஸ்மிகா	2		2
செ.நியுட்சன்	3	ஆங்கில சொல்லுருவாக்கம்	2
ம.பிரக்கியா	3		3
ஜெ.ரக்சனா	4	விரைவு கணிதம்	1
த.ரஷானா	4	பொது அறிவு	2
த.ரவின்சா	6	கட்டுரை	1
டெ.பிஸ்ரிகா	6	கட்டுரை	2
வி.மேனுஜா	7	கட்டுரை	1
ர.ஜெருசா	7	கட்டுரை	2
ஸ்ரீ.அபிரா	8	கட்டுரை	1
ம.யுனிஸ்ரா	8	கட்டுரை	2
து.சங்கவி	8	கட்டுரை	3
ச.சர்ஜினா	10	கட்டுரை	1
இ.திரிசா	10	கட்டுரை	2
ஸ்ரீ.அனுசியா	10	கட்டுரை	3
ச.தினுஜா	11	கவிதை	1
சி.அபிநயா	11	கவிதை	2
சோ.இவாஞ்சலின்	11	கவிதை	3
மு.செந்தூரன்	12	சுவரொட்டி	2

அ.லக்ஜினி	12	சுவரொட்டி	3
லோ.ராதிகா	13	சுவரொட்டி	3

நூலக தேசிய வாசிப்பு மாதம் (2025) தமிழ் பாடசாலைகள்
தேசிய மட்டம் மூன்றாம் நிலை

வலயமட்ட எல்லே பெரு விளையாட்டு

மாணவர் பெயர்	நிலை
பா. விதுசா	3ம் இடம்
சி. பிரியந்திகா	3ம் இடம்
வி. தீபிகா	3ம் இடம்
சு. நேமித்தியா	3ம் இடம்
கெ. தனுஜா	3ம் இடம்
பி. சுஜிதப்பிரியா	3ம் இடம்
க. இனியா	3ம் இடம்
வி. விதுர்சிகா	3ம் இடம்
வ. நஸ்மீரா	3ம் இடம்
சி. அபிநயா	3ம் இடம்
சு. சர்மி	3ம் இடம்
செ. செமிதா	3ம் இடம்
ப. அனிற்றா	3ம் இடம்
ப. லக்சனா	3ம் இடம்
இ. சுருதிகா	3ம் இடம்
கி. கிசாந்தினி	3ம் இடம்
உ. அபிநயா	3ம் இடம்
ர. திசானா	3ம் இடம்
இ. பிருத்திகா	3ம் இடம்
அ. லக்ஜினி	3ம் இடம்

பாடசாலையின் பௌதீக வளம்

திகதி	அனுசரனை வழங்கியோர்	விபரம்
06.01.2025	பழைய மாணவர் சங்கம்	வரணம் பூசுதல், யன்னல் திருத்தம்
07.01.2025	சைவ முன்னேற்றச் சங்கம்	மின்திருத்த வேலை
09.06.2025	திருமதி.ஸ்ரீகாந்தன் நாமகள்தேவி	மின்திருத்த வேலை
07.08.2025	திரு.ஜெயக்குமார் கந்தையா	5S செயற்றிட்டம்
07.08.2025	திருமதி.பாலமயூரன் சிவபாலன்	5S செயற்றிட்டம்
18.09.2025	திரு.வடிவேல் மயூரேசன்	சுவரொட்டிகள் காட்சிப்படுத்தல்
14.10.2025	திரு.வண்.வாமதேவன்	கொடிக்கம்பங்கள்
18.12.2025	திரு.சு.தயகுமார்	சுவர் ஓவியம், திறன்பலகை

விழாக்கள்

திகதி	அனுசரனை வழங்கியோர்	விபரம்
29.01.2025	உயிர்ப்பு	பொங்கல்விழா
30.01.2025	திரு.ப.செந்தில்குமரன்	இல்லமெய்வல்லுநர் போட்டி
10.10.2025	கலாநிதி.ஆறுதிமுருகன்	ஆசிரியர் தினம்
10.10.2025	பழைய மாணவர்தாய்ச்சங்கம் உயிர்ப்பு	ஆசிரியர் தினம், நவராத்திரி தினம்
31.10.2025	திருமதி.ஜெ.செல்வாஜினி	சிறுவர்தினம்
31.10.2025	திருமதி.ந.ராஜ்குமார்	சிறுவர்தினம்

பாடசாலை மாணவர்களின் கற்றல் நடவடிக்கை அபிவிருத்தி

திகதி	அனுசரனை வழங்கியோர்	விபரம்
06.01.2025	திரு.ம.மலர்வண்ணன்	தேசிய போட்டிக்கு அழைத்துச் செல்லல் (அலரி மாளிகை)
20.02.2025	திரு.இ.குவேந்திரநாதன்	சீருடை, சப்பாத்து
24.04.2025	திரு.கரன்	கற்றல் உபகரணங்கள்
24.04.2025	திருமதி.லலிதா சிவபாலன் மற்றும் திரு.சுப்பிரமணியம் திருமால்மருகன்	வகுப்பு முதல்வர், மாணவர் தலைவர் சின்னங்கள்
28.04.2025	திரு.திருமதி.சுஜித்தா கணேசானந்தன்	கற்றல் உபகரணங்கள்
27.05.2025	திரு.சி.மாணிக்கராசா	பாவணைக்குட்படுத்திய புத்தகங்கள்
17.06.2025	றொட்டறிக்கழகம்	துவிச்சக்கர வண்டிகள்
25.07.2025	நேசக்கரங்கள்	பாதணிகள் (ஆரம்பப்பிரிவு)
29.07.2025	திரு.தி.ஜெகதீசன்	குருளைச்சாரணர் வெற்றிதாரகை சின்னம் சூட்டுதல்
08.08.2025	திருமதி.சி.திருமாறன்	புலமைப்பரிசில் பரீட்சைக்கான எழுதுகருவிகள்
28.08.2025	திரு.ப.செந்தில்குமரன்	இணையத்தள முகவரி உருவாக்குதல்
28.08.2025	திரு.ப.செந்தில்குமரன்	கற்றல் ஊக்குவிப்பு
02.09.2025	திரு.ப.செந்தில்குமரன்	கல்விச் சுற்றுலா
02.09.2025	திரு.சு.சுபதாசன்	கல்விச் சுற்றுலா
10.09.2025	வெளிநாட்டு அன்பர்கள்	கற்றல்உபகரணங்கள்
18.12.2025	திருமதி.கீர்த்தனா குணரூபன்	பயிற்சி புத்தகத் தொகுதி
31.12.2025	வெளிநாடடு அன்பர்கள்	புத்தகப்பபைகள்

பாடசாலை மாணவர்களுக்கு உணவு வழங்கியோர்

திகதி	அனுசரனை வழங்கியோர்	விபரம்
24.04.2025	திரு.ரவி	மதிய உணவு
26.09.2025	உயிர்ப்பு	மதிய உணவு

“நினைவுப் பரிசில் நிதியம்”

ஞாபகார்த்த பரிசில்களுக்காக நிலையான வைப்புக்கு நன்கொடை வழங்கியோர் விபரம்

- திருமதி.ரே.சிவசோதி சகோதரி த.நிர்மலாதேவியும் மற்றும் சகவகுப்பு தோழிகள் — ரூபா 100 000.00
- திருமதி.கொ.மாணிக்கராஜா (ஓய்வுநிலை ஆசிரியர்) — ரூபா 200 000.00
- வைத்திய கலாநிதி திருமதி.செ.பிரசன்னா மற்றும் குடும்ப உறுப்பினர் — ரூபா 101 500.00
- திரு.இ.குவேந்திரநாதன் (ராஜா பிளாசா) பழைய மாணவர் கோண்டாவில் — ரூபா 100 000.00
- திருமதி.தவருட்கரசி கந்தசாமி
- (கோண்டாவில் பாடசாலை நிறுவுனரின் மகள்) — ரூபா 600 000.00
- திருமதி.வீரபாகு வரதரட்ணம் புனிதவதி தம்பையா கணேசபிள்ளை குடும்பம் சார்பாக பிள்ளைகள் — ரூபா 500 000.00
- திரு.க.கணேசதாசன் — ரூபா 50 000.00
- திரு.கமலவேணி விஜயகுமார் (ஓய்வுநிலை ஆசிரியர்) — ரூபா 100 000.00
- திரு.நல்லையா பாஸ்கரன் (பழைய மாணவர்) லண்டன் — ரூபா 100 000.00

சுவிஸ் பழைய மாணவர் சங்கம்

- திரு.குணரட்ணம் குணரூபன் — ரூபா 38 500.00
- திரு.பொன்னுத்துரை குணநாயகம் — ரூபா 38 500.00
- திரு.நவரட்ணம் சிவகுருநாதன் — ரூபா 38 500.00
- திரு.நடராஜா தம்பிராஜா — ரூபா 38 500.00
- திரு.கனகசபை லிங்கேஸ்வரன் — ரூபா 38 500.00
- திரு.ஜெயக்குமார் துரைராஜா — ரூபா 38 500.00
- திரு.பரமநாதன் சசிகரன் — ரூபா 38 500.00
- திரு.சுப்ரமணியம் நிமலநாதன் — ரூபா 38 500.00
- திருமதி பாமா நிசாந்தன் — ரூபா 38 500.00
- திரு.சங்கரசிவம் ரமேஸ்கரன் — ரூபா 38 500.00
- திரு.கருணாகரன் அஜிந்தன் — ரூபா 38 500.00
- திரு நித்தியானந்தசிவம் ரவிசங்கர் — ரூபா 38 500.00
- பரமநாதன் ஜாமினி — ரூபா 38 500.00
- திரு.பரஞ்சோதி அம்பிகைபாலன் — ரூபா 150 000.00
- அமரர் செல்லையா துரைராசா — ரூபா 190 000.00

நன்றியுரை

“எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை

செய்ந்நன்றி கொன்ற மகற்கு”

எந்த அறத்தை மறந்தவர்களுக்கும் வாழ்வு உண்டு. ஆனால் ஒருவர் செய்த உதவியை மறந்தவர்களுக்கு வாழ்வு இல்லை என்னும் வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கு அமைய பரசில் தின நிகழ்விற்கு எம்மோடு உழைத்த அனைவருக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். எமக்கு என்றும் தோன்றாத்துணையாக நின்று அருள் வழங்கும் அற்புதநர்த்தன விநாயகரின் பாதக்கமலங்களை வணங்கி, இன்றைய நிகழ்வில் ஆசிச்செய்தி வழங்கிய எமது வித்தியாலய பிரதம குருக்கள் ஐயா அவர்களுக்கு முதலில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். எமது அழைப்பை இன்முகத்துடன் ஏற்று பிரதம விருந்தினராக வருகை தந்து நிகழ்வைச் சிறப்பித்ததோடு, மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கிக் கௌரவித்த வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் திரு.யோகேந்திரா ஜெயச்சந்திரன் அவர்களுக்கு வித்தியாலய சமூகம் சார்பாக மனம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சிறப்பு விருந்தினாராக வருகை தந்த எமது வித்தியாலய பழைய மாணவியும், சுன்னாகம் மக்கள் வங்கி பிரதி முகாமையாளரும் ஆகிய திருமதி சுபாஜினி பகீரதன் அவர்களுக்கும் பணிவான நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

எமது வித்தியாலயத்தின் இலக்கு நோக்கிய பயணத்தின் பாதைகளை சீராக்கி வழிபடுத்திய கல்வித் திணைக்கள அதிகாரிகளான வலயக்கல்விப்பணிப்பாளர், பிரதிக்கல்விப் பணிப்பாளர், கோட்டக் கல்விப்பணிப்பாளர், சேவைக்கால ஆலோசகர்கள் அனைவருக்கும் எமது பாடசாலை சமூகம் சார்ந்த உளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மேலும் எமது வித்தியாலயத்தின் நிர்வாக முகாமைத்துவக் குழுச் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்ல உறுதுணையாக எமது நலன்கருதிச் செயற்படும் கல்வித்திணைக்கள பொறியியலாளர், கணக்காளர், நிர்வாக உத்தியோகத்தர்கள், தொழில்நுட்ப அலுவலர்கள் மற்றும் கல்விசாரா உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் வித்தியாலய சமூகம் சார்பாக மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அடுத்து எமது அழைப்பை இன் மனதுடன் ஏற்று இன்றைய விழாவில் கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் எமது அயற்பாடசாலைகளின் அதிபர்கள், ஓய்வுநிலை அதிபர்கள், இடமாற்றம் பெற்றுச்சென்ற அதிபர்கள், பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள், கல்வி சாரா ஆளணியினர் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்நிகழ்வு சிறப்புற அமைவதற்கு ஒரே குடும்பமாக நின்று உழைத்த பிரதி அதிபர், உப அதிபர், பகுதித்தலைவர்கள், அசிரியர்கள் மற்றும் கல்வி சாரா உத்தியோகத்தர்கள் அனைவரக்கும் இதயம் நிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

எமது வித்தியாலயத்தின் கல்வி மற்றும் பௌதிக அபிவிருத்தியின் தூண்களாச் செயற்பட்டு வரும் பழைய மாணவர்களுக்கும், புலம் பெயர்ந்து வெளிநாடுகளில் வசிக்கும் பழைய மாணவர்களுக்கும், நலன்விரம்பிகளுக்கும் இவ்வேளையில் வித்தியாலய சமூகம் சார்பாக இதய பூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றென்.

இன்றைய மாணவர்களுக்கான பரிசில் தின விழாவில் நினைவு பரிசில் நிதியத்தின்” ஊடாக நிதிப்பங்களிப்பு வழங்கிய அனைவருக்கும் மனநிறைவான நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இப் பரிசில் தின விழா சிறப்பாக நடைபெறுவதற்குப் பல்வேறுபட்ட வழிகளிலும் துணை நின்ற அனைத்து நல்லுள்ளங்களுக்கும் உளம் கனிந்த நன்றியைத் தெரிவித்தக்கொள்கின்றேன்.

பாடசாலை கீதம்

ஒளிமிகும் எம் வித்தியாலயம் வாழ்க!
ஓதும் நன் மாணாக்கர் வாழ்க!
கோண்டாவில் கிழக்கு கலைக்கோயில்
இராமகிருஸ்ண வித்தியாலயம் வாழ்க!
குவலயம் புகழ் ஞான ஒளிதனையூட்டும்
ஆசிரியர் நீடூழி வாழ்க!
ஆசிரியர் பெற்றோரும் வாழ்க!
அறிவோடு திருவுறுவோமே
அழகுறப் பயின்றிடுவோமே
வாழ்க ! வாழ்க ! வாழ்க !

நீதி உயர்ந்த மதி கல்வி நல்லன்பு
நிறைய உடையவர்களாவோம்
ஓதியுணர்ந்தொழுகி உலகோர் உவந்திடும்
உத்தம மனிதர்களாவோம்
உண்மை ஒழுக்க நெறி நின்று
உளத்தூய்மை யுற்றருளில் வாழ்வோம்
ஓங்கு சிவ ஞானத்தில் வாழ்வோம்
வாழ்க ! வாழ்க ! வாழ்க !

அழுதான தமிழ் எங்கள் தாயை நாம் பேணி
ஆங்கிலம் ஆரியம் கற்போம்
தமிழிலே விஞ்ஞானம் கணிதங்கள் கற்போம்
தொழில்நுட்ப விவசாயம் கற்போம்
லலித கலை நுண்கலைகள் எல்லாம்
எளிதா யென் மொழியினில் கற்போம்
வாழ்க ! வாழ்க ! வாழ்க !